திருவள்ளுவர் ஆண்டு 1979 ஆவணி 20
சென்னை, 4—9—48

3



இதுதான் காந்தீயமா?

உத்தமர் காந்தியார் வகுத்த அஹிம்சை நெறியைக் கடைப்பிடியுங்கள் என்று நாள் றும் நாட்டு மக்களுக்கு உபதேசம் செய்வதில் யாருக்கும் பின் வாங்கியவரல்லர் ந்தூரார். ஆனல் அதே ஓமந்தூரார்தான் தமிழ் மக்களைத் தடியால் அடித்துத் துன் த்தவும், துப்பாக்கி கொண்டு சுட்டு வீழ்த்தவும், எட்டு மாத கர்ப்பிணி என்றும் பாராது காட்டில் தாய்மார்களைத் தவிக்கவிடவும் விநாடிக்கு விநாடி போலீசாருக்குக் கட்டளை ப்பித்த வண்ணம் இருக்கிறார். நாம் கேட்கிறோம், நல்லறிவாளர்கள் யாவரும் கேட் றனர், நாடே கேட்கிறது: "இதுதான் காந்தீயமா?"

டு $1\frac{1}{2}$ அணு.

வெளி நாடு 2 அணு

வேமன்னா வீசிய வெடிகுண்டு!

[அறிஞர் அண்ணாதுரை]

பார்ப்பனீயத்தை எதிர்த்து நடத்தப்பட்ட புரட்சி, கலைத்துறையில் அடிக்கடி நடைபெற்றிருக்கிறது. ஆந்திர நாட்டிலே ஆரியத்துக்கு அடிபணிய மறுத்து, சிந்தனைச் சுதந்திரத்துக்குப் பாடுபட்ட பெரியார்களில் **வேமன்னா** மிக முக்கியமானவர். அவர், மதத்தரகரின் மண்டைக் கர்வத்தையும் அவர்களின் மாயவாதத்தைக் கேட்டு மதி மயங்கியவர்களின் ஏமாளித்தனத்தையும், கண்டித்தார், ஜாதிமத பேதத்தைச்சாடினார், சமரச கீதத்தைப் பாடினார். புரட்டு அவருக்கு எட்டி! புரோகிதபோதனை, வேம்பு! அச்சமின்றி இவைகளைக் கண்டித்தார். மதத்தின் பெயர் கூறிக்கொண்டு, சடங்கு சாஸ்திரம் சம்பிரதாயம் என்று பழமையைப் பிடித்துக்கொண்டு பாழ்படும் பாமர மக்களைத் தட்டி எழுப்ப, எளிய, இனிய, கவிதைகளைப் பொழிந்தார். "இன்ன அவதாரமெடுத்தவனே! இவ்வளவு உயரம் இருப்போனே! இரண்டு மனைவி உடையவனே! மலையைத் தூக்கியவனே! மாடு ஏறினோனே!" என்ற முறையிலே, கடவுளின் உருவம், திருவிளையாடல், ஆகியவற்றையே, பாடலாகக் கேட்ட மக்களுக்கு, வேமன்னாவின் பாட்டு, வெடிகுண்டுகள் போலிருந்தன. உண்மையிலேயே, வேமன்னாவின் பாடல்களின்போக்கு, வைதிகக் கோட்டைகளைத்தாக்கித்தகர்த்திடும் வெடிகுண்டுகள்தான்! அவருடைய கவிதைகள் கடவுளைக் குறித்துக் கபடர்கள் கட்டிவிட்ட மட்டரகமான கதைகளைக் குப்பை மேட்டுக்குக்கொண்டு சென்றன! தொழுது கிடந்தவர்களை, அவர் தமது கவிகளைப்பாடி, புரட்டை விளக்கி, விடுதலை அடையச் செய்தார். அவருடைய கவிதைகளிலே அறிவு மணமும் புரட்சித் தீயும் கலந்து இருந்தன. அவ்வளவுடன், அகராதியைத் துணைகொண்டோ, புலவர்களிடம் பாடம் கேட்டோ மட்டுமே புரிந்து கொள்ளக்கூடியதான, கடின நடையாக அமையாமல், படித்ததும், பாமரரும் எளிதில் உணர்ந்து கொள்ளக்கூடிய நடையாக இருந்தது. எனவே, வேமன்னாவின், கவிதை 'புலவர்களின்' பூசனைக்கேற்ற ஏடாகவோ, பூஜை அறைக்குகந்த நூலாகவோ, பயனற்றுப்போகாமல், சாதாரண மக்களுக்குப் பயன்படக்கூடிய, சத்துள்ள ஏடாயிற்று. பூசிமெழுகுவதும், புறங்கூறிப் பார்ப்பதும், பல பொருளுக்கு இடமிருக்கச் செய்வதன் மூலம், உண்மைப் பொருளை மறைப்பதுமான வேலையை வேமன்னா வெறுத்தார். மனதிலே பட்டதை, வெட்டொன்று துண்டு இரண்டென வெளியிட்டார். வெகுண்டனர் வைதீகர்! பாமரரோ, பயன்பெற்றனர். விடுதலை வீரனும் வேமன்னாவின் கவிதை நுழையாத வீடில்லை! அவருடைய வாதத்தை மறுத்துரைக்க எந்த வேதியருக்கும் துணிவில்லை. தன்மானத்தீயைப்பரப்பிக் கொண்டிருந்தார், வேமன்னா.

உரிமைப்போர் உணர்ச்சி மிகுந்து, விடுதலை வேட்கை அதிகரித்து, எதையும் ஆராய்ந்தறிய வேண்டும் என்ற ஆர்வம் மிகுந்திருக்கும் இந்நாளிலே நாம் மிகச் சுலபமாக 'ஜாதி இல்லை; மதபேதம் ஒரு தொல்லை! கடவுள் பேரைக் கூறிவருவர்கயவர், கேளாதீர் அவர் சொல்லை! பார்ப்பனர் உயர் ஜாதி என்பர், அதுவெறும்புரட்டு, பிறப்பினால் உயர்வு தாழ்வுஇல்லை!" —என்று கூறிவிடுகிறோம். பழமையைக் குட்டுகிறோம், இன்றும்சிலர், நமதுபிரச்சார வேகத்தைக்கண்டு, பீதிகொள்கின்றனர். மக்களின் மனம் புண்ணாகும் என்று சொல்கின்றனர். மெள்ளச் சொல்லு கொஞ்சம் கொஞ்சமாகச் செல்லு, என்று "நிதான போதனை" செய்கின்றனர். இன்னும் சிலர், "எப்படி அந்தக்காலப் பெரியவர்களின் முறைகளைக்கண்டிக்கலாம், இன்று நேற்று ஏற்பட்டதா, அந்தமுறை?" என்று, பழமைக்குப் பரிந்துபேசுகின்றனர். வேமன்னா 500 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர். அந்த நாளிலேயே அவர், இன்று நாம் கூறும் புரட்சி உரைகளை, அஞ்சாது அயராது எடுத்துக்கூறினார் என்பதை அறியும்போது நாம், ஆச்சரியப்படுகிறோம், அவர் எவ்வளவுபெரிய வீரர் என்பதை உணர்ந்து வியப்புமடைகிறோம். விஜய நகர சமஸ்தானாதிபதிகளால், வளர்க்கப்பட்டு, வணங்கப்பட்டு, ஆரியம், ஆந்திரத்திலே கொழுத்ததை வரலாற்றிலே காணலாம். அப்படிப்பட்ட ஆந்திரத்திலே ஒரு வேமன்னா தோன்றி அஞ்சா நெஞ்சினராக நின்று, ஆரியத்தைக்கண்டித்தாரென்றால், அது வெறும் விவேகி என்ற பட்டத்தை மட்டுமல்ல, வீரர் என்ற விருதையும் வேமன்னா பெற யோக்கியதையுள்ளவர் என்பதையே விளக்குகிறது. பேச்சுச் சுதந்திரமும் எழுத்துச் சுதந்திரமும் அணியாக உள்ள அரசு இதுபோது உண்டு. அன்றோ அப்படியில்லை. சாஸ்திரிகளின் சீற்றம், சாம்ராஜ்யங்களையே சாம்பலாக்கி விடும் என்றநிலை அந்நாளில்! அப்படிப்பட்ட காலத்திலே காரசாரமாகக் கவிபாடிக் கனபாடிகள் கொட்டத்தைக் கருவறுக்கக் கடும்போரிட்டார், வேமன்னா.

வேமன்னா, வேதியக் கூட்டத்துக்குத் துதிபாடியிருந்தால், அவரைவிடச்சிறந்த விற்பன்னர் இல்லை என்றும், அவர் வியாசரின் மறுபிறவி என்றும், ஆரியர் ஏடெழுதிவிட்டிருப்பர். அவர் ஆரியத்தின் உச்சிகுலுங்க அடித்த்வராதலால், அவரைப்பற்றி 'இருட்டடைப்பு' ஏற்பட்டுவிட்டது. அவர், அரசகுடும்பத்தவர் வழித் தோன்றல்

புதியதோர் உலகு செய்வோம்—கெட்ட

என்றும், ரெட்டியார் வகுப்பென்றும், இளமையிலேயே பிரச்சாரத்திலே ஈடுபட்டுத் துறவியாகி குண்டூர்மாவட்டப் பகுதியிலும் மற்றைய இடங்களிலும், வாழ்ந்தார் என்பதன்றி விரிவான வரலாறு கிடைக்காமற் போய்விட்டது. கர்ணபரம்பரைக்கதைகள் உண்டு. ஆனால் குறிப்பானவரலாறு இல்லை. அவரைத் தெரிந்துகொள்ள வரலாறு இல்லையே என்பது பற்றியகவலை தேவையில்லை. ஏனெனில் அவருடையகவிதைகள், நமக்கு அவரை நன்கு காட்டுகின்றன, ஏறக்குறைய 3000 கவிதைகள் மிஞ்சியுள்ளன. அவ்வளவும், ஆரியத்தின் ஆணிவேருக்குக் கொதிக்கும் நீர்போன்றன!

"இருட்டறைதன்னிலே
இட்டகல்லை
எட்டநின்று பூசைசெய்யும்
மட்டிகளே!
உள்ளிருக்கும் நாதன்தன்னை
உணராதது ஏனோ?"

என்று கேட்கிறார் வேமன்னா! இருட்டறை, கோவில்! அதிலே இட்டகல் சாமி! இதைத் தொழுபவர் அறிவிலிகள்! ஏன்? ஆண்டவனுக்குக்கோயில், வெளியே இல்லை, உள்ளமே அவனுக்கு உறைவிடம்! இது வேமன்னாவின், கவிதை! வைதீகத்துக்கு வெடிகுண்டல்லவா இது? ஒவ்வொரு கோயிலுக்கு எத்தனை மகத்துவம் கற்பிக்கப்பட்டிருக்கின்றன! இதை நம்பிக்கொண்டு, எவ்வளவு பேர் "யாத்திரை" போகிறார்கள்! இதனால், பரம்பரையாக எவ்வளவு ஆரியர் பிழைக்கின்றனர், இந்தப்பிழைப்பின் வாயிலே, மண்போடுமல்லவா, வேமன்னா சதகம்! அட! முட்டாளே, அங்கே போய்க் கல்லைக் கும்பிடுவானேன், ஆண்டவன்தான் உன் உள்ளத்திலே இருக்கிறானே! —என்று கேட்கும்போது அது, பாமரமக்களின் மனதிலே பாய்கிறது. முதலிலே கொஞ்சம் கோபமாகத்தான் இருக்கும். ஆனால், கொஞ்சம் யோசிக்கத்தொடங்கியதும், "ஆமாம், வேமன்னா சொன்னது உண்மைதான்!" என்று உணர்வர். அத்தகைய உயிர்க் கவிதை அவருடையது.

பல தெய்வ வணக்கத்தையும், பார்ப்பனப் புரட்டையும், ஜாதிபேதத்தையும், வேமன்னா கண்டித்துப் பாடியுள்ளவைகளிலே, ஒரு சிலவற்றைக் கீழே பொறித்துள்ளோம்—படித்து இன்பம் பெறுக. ஆரிய மோகத்தை ஒழித்துத் திராவிடப் பண்பை வளர்த்து "திராவிடநாடு திராவிடருக்கே" என்ற தத்துவத்தை, ஆந்திர நாட்டிலே பரப்ப முடியாது என்று நம்மவரில் சிலர், புறங்கூறித் திரிகிறார்களே, அவர்கள் உணரவேண்டும்; ஆரியத்துக்கு எதிர்ப்புணர்ச்சி ஆந்திரத்திலே இருந்திருக்கிறது, இன்றும் இருக்கிறது- வேமன்னா வாழ்ந்த நாட்டிலே ஈரோட்டுவிதை, எளிதிலே பலன்தரும்! எள்ளளவும் சந்தேகம் வேண்டாம். காவி அணிந்தவர்களைக் கண்டால், இன்று, சர்வசாதாரணமாகக் கேலி செய்யுமளவு, மக்களிடை மதி மலர்ந்திருக்கிறது என்றபோதிலும், என்னமோ யார் கண்டார்கள்! ஏதேனும் சித்து விளையாடக்கூடியவராக இருக்கக் கூடும்! யோக சாதனத்திலே நிபுணராக இருப்பார்! என்று, பாமரர் மனதிலே, ஒரு சபலம் தட்டுவதும் இருக்கிறது. இப்படிப்பட்ட மக்கள் வேமன்னாவின் காலத்திலே, இன்று இருப்பதைவிட எவ்வளவோ அதிகமான அளவு காவியிடம் மதிப்பு வைத்திருப்பர். வேமன்னா, அந்தக் காலத்திலே காவிக் கபடரைக் கண்டித்திருக்கும் பாடல்கள் பல! ரொம்ப நெஞ்சழுத்தம் இருந்திருக்க வேண்டுமல்லவா அதற்கு!

வேமன்னா வீசும் வெடிகுண்டுகளைப் பாருங்கள்.

"பரிவுடன் நீரில்மூழ்கிப்
பட்டையாய் நாமம்சாற்றி
அரியநற் காவியாடை
பண்புடன் பூண்டுநின்றே
அரிசனம் உடலிற்பூசும்
அரிவையர் வதனங்கண்டால்
உரமிலராகித்தான்கொள்
உறுதியும் இழப்பர் வேமா"

மனக்கண்முன் வருகிறானல்லவா பட்டைநாமப் பூச்சுக்காரன்! அவனுடைய காமச் சேட்டையைத்தான் கேட்டிருப்பீர்களே. பாருங்கள் மேலும், அவன் வேமன்னாவிடம் சிக்கிப் படுகிறபாடு எப்படியிருக்கிறது என்று.

"காவிசேராடை தன்னைக்
கண்ணியமுடனே பூண்டு
மேவிய யோகிபோன்று மேதினி
தன்னிற் றோன்றி
பாவியஆசை என்னும்
பற்றுற்றுத் திரிகின்றோனே
தாவிலா தோங்கும் கள்ளச்
சன்யாசியாவன் வேமா"

சுமைதாங்கிகளே! — என்று கேலி செய்கிறார், காவி உடையினரை! கேளுங்கள் இந்தப் பாட்டை,

(10-ம் பக்கம் பார்க்க)

திருச்சி ரத்தினவேலு தேவர் ஹாலில்
6—9—48 திங்கள் இரவு 10-மணி
மு. கருணாநிதி எழுதிய
"தூக்குமேடை" நாடகம்
மு. கருணாநிதி, டி. கே. சீனிவாசன், புலவர் குழந்தையா முதலியோர் நடிக்கிறார்கள்.

தொடர்கதை :

மனப்புயல்

இராதாமணாளன்

பத்தொம்பதாவது பகுதி

துன்பக்கேணி

படுத்த படுக்கையாய் இருந்த சிவனின் அருகில் ஒரு கிண்ணத்தில் கஞ்சியை எடுத்துக்கொண்டு குமுதம் வந்தாள். கிண்ணத்தை அருகிலிருந்த ஒரு பலகையின் மீது வைத்து விட்டு, மெள்ள அவனைத் தூக்கி உட்கார வைத்தாள். கட்டிலில் சிவன் சாய்ந்து கொண்டு உட்கார்ந்த பிறகு, "கஞ்சிஆறிப்போகிறது, கொஞ்சம் சாப்பிடுங்கள்" என்று கூறி, அவனிடம் அந்தச் சிறிய கிண்ணத்தைக் கொடுத்தாள். அவன் கஞ்சியைக் குடித்தான்; அவள் ஈரத்துணி கொண்டு அவனது வாயைத்துடைத்தாள்.

குமுதத்தின் பக்கத்தில் வைத்தியர் வையாபுரி வாடிய முகத்துடன் நின்று கொண்டிருந்தார். அவர் மனம், தன் மகளின் எதிர் காலத்தைப் பற்றி சிந்திக்கத் தொடங்கியது: கண்கள் கக்கிய நீர்த்துளிகளைக் குமுதம் எங்குபார்த்து விடப் போகிறாளோ என்று அஞ்சி அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே சென்றார்.

குமுதம் தன் வேலைகளை வழக்கப்படி செய்து கொண்டிருந்தாள். அவள் முகத்தில் எந்த விதமான உணர்ச்சியும் பிரதிபலிப்பதாகத் தெரியவில்லை. முறுக்கி விட்ட யந்திரம் வேலை செய்வதைப்போல, யாதொரு உணர்ச்சியும் இல்லாமல் தன் கடமைகளை அணங்கு செய்து கொண்டிருந்தாள். அவள் பெண் உள்ளத்தில் பலப்பலவித உணர்ச்சிகள் தலைவிரித்து கோரநடனம் புரிந்துவிட்டு ஓய்ந்த நேரம் அது!

தன் தந்தையாருடன், வேறொரு புதிய மனிதர் வருவதைக் கண்டதும் குமுதம் அறையின் ஒரு பக்கமாகச் சென்றாள். வந்தவரும், வைத்தியரும் இரு நாற்காலிகளில் சிவனின் அருகே உடகார்ந்தார்கள்.

"சிவா! இவர்தான் இப்பக்கத்தில் பிரசித்திபெற்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் பூர்ணலிங்கம் என்பவர்." என்று புதியதாக வந்தவரை சிவனுக்கு வையாபுரி அறிமுகம் செய்துவைத்தார். இருவரும் வணக்கம் தெரிவித்துக்கொண்டனர்.

"தாங்கள் என்னை ஏன் தேடிக் கொண்டுவந்திருக்கிறீர்? ஏதாவது முக்கியமா?" என்று மெதுவான குரலில் சிவன் கேட்டான்.

"ஆமாம்! ஒரு உயிரைக் காப்பாற்றுவதற்காக தாங்கள் சிறிது நேரம் செலழித்தால் மிகவும் நல்லதென்று கருதுகிறேன். தாங்கள் யாது கூறுவீரோ?" என்றார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

"யார் உயிரைக் காப்பாற்ற?"

"இது மிகவும் ரகசியமான செய்தி. பிறகு கூறுகிறேன். முதலில் நான் கேட்கும் கேள்விகளுக்குமட்டும் பதில் அளித்தால் போதும்"

"அப்படியே செய்கிறேன்!"

அறையின் ஒரு மூலையிலிருந்த குமுதமும், போலீஸ் அதிகாரியின் அருகே உட்கார்ந்திருந்த அவள் தந்தையும் ஆச்சரியத்தோடு பேசாமல் மௌனமாய் இருந்தனர்.

போலீஸ் அதிகாரி பேச ஆரம்பித்தார்.

"கோட்டீஸ்வர அய்யரைத் தாங்கள் அறிவீர்களா?"

"அறிவேன்."

"எத்தனை ஆண்டுகளாக"

"சிறு வயதிலிருந்தே......"

"அவர் மகள் மனோரமாவைத் தான் தாங்கள் மணந்து கொண்டீர்களா?"

"ஆம்!'

"தாங்கள் என்ன ஜாதி"

"ஜாதியை மறந்தவன் நான். திராவிட இனத்தைச் சேர்ந்தவன்"

மிகுந்த சோர்வு கொண்டவனைப் போல சிவன் காணப்படவே, வைத்தியர் தன் மருமகனுக்குக் காபி கொடுத்தார். பிறகு பூர்ணலிங்கம் தன் கேள்விகளைத் தொடர்ந்தான்.

"மனோரமாவை மணந்ததனால், அய்யருக்கும் உமக்கும் விரோதம் ஏற்பட்டதா?"

"நான் அவரை விரோதியாகக் கருதவில்லை. ஆனால் அவர் என்னை பரம விரோதியாகப் பாவித்தார்."

"சரி! ஓர் நாள் இரவு மனோரமாவுடன் தாங்கள் குளக்கரையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் போது, ஒருவன் உம்மைக் கத்தியால் குத்த வந்தானா?"

"ஆமாம்! இதனைத் தாங்கள் எப்படி அறிவீர்?"

"அறிந்த விதத்தை வழக்கு நடக்கும்போது தெரிந்து கொள்வீர்! குத்தினவன் யார் என்பதையோ அல்லது யாரால் ஏவப்பட்டவன் என்பதையோ தாங்கள் விசாரித்தீர்களா?"

"இல்லை!"

"தாங்கள் எந்தக் கட்சியையாகிலும் சேர்ந்திருக்கிறீர்களா?"

"திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவன் யான்."

"உம் கழகத்தைச் சேர்ந்தவர்களை அய்யர் வெறுத்து வந்தாரா?"

"ஆமாம்! ஒழித்துக் கட்டுவதாகவும் பல முறை கூவியிருக்கிறார்!"

"இவ்வூரைச் சேர்ந்த குமரரோடு தங்களுக்குப் பழக்கமுண்டா?"

குமுதம், வையாபுரி ஆகிய இருவரின் கண்களும் அகல விரிந்தன. ஏன் இந்தக் கேள்வி இங்கு எழுகிறதென்பதை அறிய முடியாமல் திகைத்தனர்.

"பழக்கம் கிடையாது. பார்த்தது மில்லை. ஆனால் அவரது

(12-ம் பக்கம் பார்க்க)

பொதுஉடமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்

சிறு கதை:

குடும்ப விளக்கு!

[" முடியரசன் "]

அவள் என் குடும்ப விளக்காக விளங்குவாள் என்று எண்ணினேன். ஆனால் அவள் அணைந்த விளக்கு. இருந்தாலும் பரவாயில்லை, மீண்டும் ஒளி பெறச் செய்யலாம என்று எண்ணினேன். அந்த ஆசையையும் அணைத்து விட்டாள். அவள் என் நண்பன் மனைவி என்பதைத் தெரிந்தும் எப்படி விரும்பும் என் மனம்—?

* * *

வழக்கம்போல் திருவல்லிக்கேணிக் கடற்கரைக்குச் சென்றேன். நெடுநேரம் ஆகியும் அவள் வரவில்லை. வேறு இடங்களிலும் உட்காரமாட்டாள். ஒரு மாதமாக இதே இடந்தான். நானும் அதன் அருகிலேயே பதிவு செய்து கொண்டேன். ஆனால், இன்று இன்னும் வரவில்லை. அவளைப் பார்க்காவிட்டால் அந்த நாள் என் வாழ்நாளின் வீழ் நாள்! எவ்வளவு துன்பமாக இருந்தது. கதிரவன் மறைந்து கொண்டிருக்கிறான். மஞ்சட் கதிர்களைக் கடலில் செலுத்திக் கொண்டிருக்கும் காட்சி மனதிற்கு அமைதியையும், மகிழ்ச்சியையும் தந்து கொண்டிருந்தது. எனக்கில்லை இருள் கவிந்து விட்டால் அவள் வரமாட்டாளே என்ற கவலைதான் எனக்கு. ஆனால், கவலை ஒரு வழியாக முடிவுக்கு வந்துவிட்டது, அவள் வந்துவிட்ட காரணத்தால். சிவந்த மேனியில் கருப்பு நிற உடை ஓர் தனி அழகு தந்தது, அவளுக்கு. எனக்கும் அதுதான் மிகப் பிடித்ததாயிருந்தது. காது, மூக்கு, கழுத்து எதிலும் ஒரு நகைகூட இல்லை. கையில் ஒன்றோ, இரண்டோ வளையல் மட்டும் ஊசலாடும். அதுவும் கருப்புத்தான்! ஆனால், அவள் உள்ளம் கருப்பல்ல என்பதை அவள் முகப்பொலிவு நன்றாக எனக்குச் சொல்லிற்று. அந்த விழியின் கருப்புத்தான் என்னை மயங்கச் செய்தது. வட்டக் கருவிழியல்ல—அதன் கீழ்த் தீட்டப்பட்ட வண்ணக் கருப்பைச் சொல்லுகிறேன். அவள் கசங்காத சோஜா! இது என் எண்ணம். அவள் மீது கொண்ட காதலற்றான் நான் நாள் தவறாது கடற்கரை செல்வது. எல்லோரும் அப்படித்தானே! கடலின் அழகிலே ஈடுபட்டு, காற்றின் நலத்திலே ஒன்றுபட்டுச் செல்வோர் எத்தனை பேர்—? காதலின் விளையாட்டுப் பண்ணை தானே கடற்கரை! அந்தப் பண்ணையில் நான் மட்டும் இடம் பெறாமலிருக்க முடியுமா என்ன—?

நான் தான் அவளிடம் காதல் கொண்டேன். அவள் விரும்பினாளோ என்னவோ எனக்குத் தெரியாது. எங்கள் இன்னும் வாய்ப்பேச்சுக் கூடப் பேசியது கிடையாதே! நான் அவளைப் பார்ப்பேன். அவளும் என்னைப் பார்ப்பாள்—என்னைப் போலவல்ல. அவள் பார்வையிலே அமைதி தான் இருக்கும். அதை நானெங்கே பொருட்படுத்தப் போகிறேன். நான் காதல் நோக்குத்தான் நோக்குவேன். எப்படியும் அவளிடம் பேசி விட வேண்டுமென்பது என் எண்ணம். ஆனால், துணிவு வரவில்லை. இன்று அந்த எண்ணம்-நிறைவேறியது. காரணம், என் மடி மீதிருந்த அந்தப் புத்தகந்தான்!

அவள் வந்து உட்கார்ந்ததும் கடலைப் பார்த்துவிட்டு என்னையும் நோக்கினாள். பார்வை, என்மடிமீதிருந்த புத்தகத்தின் மீது விழுந்தது. நான் அவள் அழகைப் பருகிக் கொண்டிருந்தேன். பேசி விட்டாள் அவள்:

'அது என்ன புத்தகம்—?'

செயலற்றவனாய்க், 'காதல் நினைவுகள்' என்று கையிற் கொடுத்தேன்; சற்று அருகில் வந்து புரட்டினாள் அவள். என் உள்ளம்—ஏன்—உலகமே புரண்டது போலத் தோன்றியது எனக்கு. என் காதல் நினைவுகளை என்று நீ அறிவாயோ என்று மனதிற் சொல்லிக் கொண்டேன். அந்த நூலின் ஆசிரியருக்கு என் மனமார வாழ்த்துக் கூறினேன்—அவளோடு பேச வாய்ப்புத் தந்த காரணத்திற்காக!

(8-ம் பக்கம் பார்க்க)

புனிதமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம்

போர்வாள்

4—9—48 சனிக்கிழமை

அற்புதமான சுயராஜ்யம்!

ஆண்டு சம்பளம்		2,50,800
நுகர்பொருள் அலவன்ஸ்		3,750
கான்ட்ராக்ட் அலவன்ஸ்		29,166
மோட்டார் அலவன்ஸ்		5,250
காரியாலய செலவு		50,500
மொத்த செலவு	ரூ.	3,39,466

"இதென்னப்பா பெரிய பெரிய புள்ளிகள், ஏதேனும் ஒரு மாகாண சர்க்காரின் பட்ஜட் திட்டத்தில் ஒரு பகுதியோ?" என்று கேட்கத் தோன்றும் உங்களுக்கு! **அல்ல!**

ஓஹோ! ஐதராபாத், பரோடா போன்ற பணக்கார சமஸ்தானங்களில் ஒன்றின் செலவுக் கணக்கு போலும் என்பீர்கள்! **இல்லை!**

டாட்டாவோ பிர்லாவோ டால்மியாவோ கோயங்காவோ யாரோ ஒரு குட்டிக் குபேரர், தானே ஆரம்பிக்கும் கம்பெனியில் தனக்குத் தானே எடுத்துக் கொள்ளும் செலவுத் தொகை பட்டியலாயிருக்கும் என்று கூற நினைப்பீர்கள்! **தவறு!**

சரி, சரி! ஆடம்பரத்திலேயே புரண்டு, படாடோபத்திலேயே உழன்று, மேனாமினுக்கித் தனத்திலேயே சுழன்று, ரூபா அணா பைசாக்களிலேயே மிதந்து, தங்கம் வைரம் கோமேதகம் முத்து மரகதம் மாணிக்கம் என்றின்ன பொருள்களிலேயே நீந்திக் கொண்டிருக்கும் யாரோ ஒரு சுகபோகியின் அலவன்ஸ் கணக்காயிருக்கும் இது என்று சொல்லத் துணிவீர்கள்! **அதுவும் தவறு!**

அப்படியானால் ஆயிரமாயிரம் அலுவலர்களைக் கொண்ட ஒரு சர்க்கார் காரியாலயத்தின் ஓராண்டு செலவினப் பட்டியல் தான் இது, ஆம், நிச்சயம் என்று அவசரப்பட்டுக் கூறுகிறீர்களா, **மீண்டும் தவறு!**

தெரிந்தது தெரிந்தது, ஆங்கில நாட்டு மன்னர் பெருமானுக்கு, அந்நாட்டு பார்லிமெண்ட் அனுமதிதந்துள்ள அலவன்ஸ் கணக்குதான் இது என்று உறுதி கூறுகிறீர்களா, **அதுவுமில்லை!**

"சரி போப்பா! எதைச் சொன்னாலும் இல்லை இல்லை என்று தலை அசைக்கிறாயே, பிறகு, இது என்னதானாம்?" என்று சலிப்புடன் நீங்கள் கேட்க வேண்டாம், நாமே சொல்லிவிடுகிறோம், இது, ஓர் ஏழை பங்காளரின் ஓர் ஆண்டு செலவுத் தொகை!

அடே அப்பா! ஒரே ஒரு ஆண்டுக்கு மூன்று லட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து நானூற்றி அறுபத்தாறு ரூபாய் செலவழித்துத் தீர்க்கும் புண்ணியவானுக்கா ஏழை பங்காளர் என்று பெயர் என்று நீங்கள் திக்பிரமை அடையலாம்! ஆனால் அவர் ஓர் ஏழை பங்காளர்தான் என்று கூறுகிறது "கல்கி"! "கல்கி"யோ பெரிய மனிதர்களின் ஏடு! அது கூறுவது பொய்யாய் இருக்க முடியாது!!

ஆண்டுக்கு $3\frac{1}{2}$ லட்சம் செலவழிக்கும் 'இவர்' ஒரு ஏழை பங்காளர் மட்டுமல்ல, எளிய வாழ்க்கையே வாழ்பவர் கூடவாம்! ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியமாயிருக்கிறதே, ஆண்டுக்கு $3\frac{1}{2}$ லட்சம் செலவிடுபவரை, அத்தகைய சுகபோக வாழ்க்கையில் நீந்துபவரை, எளிய வாழ்க்கையினர் என்று சொன்னால், ஒன்று, சொல்பவர் முழுப் பூசணியில் சோற்றை மறைப்பவராய் இருக்கவேண்டும், அல்லது, எளிய வாழ்க்கை என்பதற்கே பொருள் குபேரவாழ்க்கை என்றிருக்கவேண்டும் என்று நீங்கள் எண்ணுவது சகஜம். ஆனால் 'இவர்' வாழ்வது எளிய வாழ்க்கைதான் என்று அறுதியிட்டுக் கூறுபவரோ பண்டித ஜவகர்லால் நேரு! அவர் சொல்வது தவறாய் இருக்க முடியாது—அவரோ கண்ணியமே உருவான கனவான்!

செலவாவதோ $3\frac{1}{2}$ லட்சம்! வாழ்வதற்கோ எளிய வாழ்க்கை என்று பெயர்! ஆமாம் அப்படித்தான் என்று நேருவின் சர்டிபிகேட்! இது என்ன புதிர்! விளங்கவே இல்லையே இந்த இந்திர ஜாலம்! என்று ஆச்சரியப் படுவீர்கள் நீங்கள், தயவுசெய்து ஆச்சரியப்படாதீர்கள்! இதுதான் சுயராஜ்யம்! $3\frac{1}{2}$ லட்ச ரூபா செலவில் எளிய வாழ்க்கை! அற்புதமான சுயராஜ்யம்!

இந்த அற்புதமான சுயராஜ்யத்தை வாழ்ந்து காட்டுபவர் யார் தெரியுமா? திராவிடர் தலைவர்கள் நூற்றுவரைச் சிறை வைத்துவிட்டு, மாவீரர் பெரியாரையும் 'உள்ளே' தள்ளிவிட்டு, போலீஸ் தோழர்களை பட்டாளம் பட்டாளமாக ஊரெங்கும் நிற்கவைத்துவிட்டு, சென்னையில், மூடிய காரில், மூக்காடிட்ட வண்ணம் "பவனி" வந்தாரே மே. த. கவர்னல் ஜெனரல் ராஜகோபாலாச்சாரியார், அவர்தான். அவரேதான்!

அற்புதமான சுயராஜ்யம்! அதற்கேற்ற அற்புதமான 'மனுஷர்!'

பொப்பிலி ராஜா மாதம் 3000 வாங்குகிறார், இந்த ஏழை நாட்டிலா ஒரே ஒரு ஒத்தை மனிதருக்கு 3000 ரூபா சம்பளம் என்று முன்பு கரடியாய்க் கத்தின தேசிய "தகர டப்பாக்கள்" இன்றென்ன செய்கின்

றன? யாருக்குத் தெரியும்! இந்த அற்புதமான சுயராஜ்யத்தில் எதுதான் யாருக்குத் தெரிகிறது!

இந்தியாவில் யாரும் மாதம் 500 ரூபாய்க்குமேல் சம்பளம் வாங்கக் கூடாது என்று காங்கிரஸ் கட்சி பல ஆண்டுகட்கு முன்னரே அதிகார பூர்வமான தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறதே, இதோ ஆச்சாரியார் 3½ லட்ச ரூபாய் வாங்குகிறாரே, அந்தத் தீர்மானம் என்ன ஆயிற்று, குப்பைக் கூடையில் வாசம் செய்கிறதா என்று நீங்கள் கேட்கலாம், நீங்கள் கேட்பதை யார் சட்டை செய்வார்கள், இது என்ன சாதாரண ராஜ்யமா சட்டை செய்ய, இதுதான் சுயராஜ்யமாயிற்றே!

வெள்ளைக்கார வைசிராய்கள் கொள்ளையடிக்கின்றனரே லட்சக் கணக்கில்—துரத்துங்கள் வெள்ளையரை என்று அண்டம் அதிரக் கூவினோமே அன்று, இன்று அதே படலம்தானே சுயராஜ்ய காண்டத்திலும் இருக்கிறது, இதற்குத்தானா இத்தனை பாடுபட்டோம், ஆட்சிப் பீடத்தில் இருப்பவர்களின் படாடோப வாழ்க்கை எனும் பெரும்பாரத்தைச் சுமந்து சுமந்து ஏழையின் முதுகெலும்பு முறிகிறது என்று அன்று சித்திர நடையிலே சுவைபட இயம்பினோமே, இன்றும் அதுதானே நடக்கிறது, இதற்கா திருப்பூர் குமரன்களை, வீர சிதம்பரங்களை, லாலா லஜபதிகளை, தூக்குமேடை ஏறிய பகத் சிங் போன்றார்களைப் பலி கொடுத்தோம் என்று கண்ணீர் விட்டுக் கதறியழுவீர்கள் நீங்கள்—அழாதீர்கள், இன்று நடப்பது சுயராஜ்யம்! அற்புதமான சுயராஜ்யம்! ஏழையின் வாழ்வு பற்றிய கவலை இருக்கமுடியாத சுயராஜ்யம்! இதிலே நியாயத்தை எண்ணி அழக்கூடாது. உண்மையை ஊராருக்கு உரைக்கக் கூடாது ஏழையின் பக்கம் பேசக்கூடாது. தாய் மொழிக்காக அறப்போர் தொடுக்கக்கூடாது. எவரேனும் உண்மையை உரைக்க முந்தினால், அவர், சிறைவாசத்திற்கு, தடியடிக்கு, துப்பாக்கி வேட்டுக்கு, கண்ணீர்ப் புகைக்கு அத்தனைக்கும் தயாராய் இருக்கவேண்டும் இதுவா சுயராஜ்யம் என்பீர்கள் நீங்கள். ஆமாம் இதுதான் சுயராஜ்யம் என்கிறார்கள் தேசியவாதிகள். நாம் நம் த்தான் வேண்டுமாம்! சொல்கிறார்கள் அவர்கள்!

"சக்கிலி! செருப்பளவில் நில்!"

சிறந்த ஓவியன் ஒருவன் ஒரு அழகிய நங்கையின் படம் வரைந்து, பலரும் பார்க்கும் இடம் ஒன்றில் நிறுத்தி வைத்து, அதில் இருக்கக்கூடிய குற்றங் குறைகளை எவரும் கூறலாம் என்று ஒரு அறிவிப்புச் சீட்டையும் அதன் கீழ் ஒட்டிவைத்திருந்தான். பலர், பல்வேறு குறைகளை எடுத்துக்கூறினர். அவை அனைத்தையும் ஓவியன் ஒப்புக்கொள்ளவில்லை. இறுதியில் ஒரு செருப்புத் தொழிலாளி அங்கு வந்தான்; படத்தைக் கண்டான், ஐயா, இந்தப் பெண்ணின் செருப்புக்கு நீங்கள் போட்டிருக்கும் தையல் சரியில்லை என்று கூறினான். உடனே, ஓவியன், தையலை, செருப்புத் தொழிலாளி கூறியவண்ணம் மாற்றி எழுதினான். அவ்வளவுதான்! செருப்புத் தொழிலாளிக்கு 'கர்வம்' பிறந்துவிட்டது அடடா! கல்வி கேள்வி செல்வத்திற் சிறந்த எத்தனையோ பேர் எத்தனையோ திருத்தங்களைக் கூறியும் அவை அனைத்தையும் ஒதுக்கித் தள்ளிய ஓவியன் எழுத்து வாசனையற்ற நாம் கூறிய திருத்தத்தை ஏற்றுக் கொண்டானே! நம் பெருமையே பெருமை! என்றெண்ணிக்கொண்டு, ஓவியனைப் பார்த்து, "ஐயா! இந்தப் பெண்ணின் புடவை நிறம் இப்படி இருக்கக் கூடாது, கண்ணின் கருவிழி கொஞ்சம் பெரிதாய் இருக்கவேண்டும், மூக்கு கொஞ்சம் சப்பையாய் இருக்க வேண்டும், உதடுகளிலும் சற்று திருத்தம் தேவை......" என்று சொல்லிக் கொண்டே போகத் தொடங்கினான். பார்த்தான் ஓவியன். அடக்க முடியாத சீற்றம் பிறந்துவிட்டது அவனுக்கு! "சக்கிலி! செருப்பளவில் நில்! ஓடிப் போ!" என்று அடித்துத் துரத்தி விட்டான் அந்த செருப்புத் தொழிலாளியை!

சென்ற வாரம், சென்னை மாகாண 5-வது பேஜிஸ்ரேட், தந்துள்ள ஒரு தீர்ப்பைக் கண்டதும் இந்தக் கதைதான் நம் நினைவுக்கு வந்தது.

யார் யாருக்கு எந்தெந்தத் துறையில் திறமை அல்லது அதிகாரம் இருக்கிறதோ அந்த அளவோடு நின்றால்தான் அவர்களுக்கும் பெருமை, அவர்கள் வார்த்தைக்கும் கவுரவம், அப்படியின்றி தங்களுக்குத் தெரியாத அல்லது தொடர்பற்ற துறைகளிலும் சிலர் நுழைந்து தங்கள் "மேலான" ஆலோசனையைத் தருவதானால், அவர்கள் செயல், செருப்புத் தொழிலாளியின் செயல் போல, பரிகாசத்திற்கு இடமாகுமே தவிர வேறில்லை.

ஆச்சாரியார், மைலாப்பூரில் தென் இந்தியப் பத்திரிகையாளர் கழகத்தில் பேசுவதற்குச் சென்ற போது, அவர் "கார்" மீது கல்லெறிந்ததாக நான்கு பேர் மீது வழக்கு. அவர்கள் நால்வரும் கருஞ்சட்டையினர் என்பது போலீஸ்காரர்களின் சாதனை. அவர்கள் கல் எறிந்தார்கள் என்பதற்கு போலீஸ்காரர்கள் கூற்றைத் தவிர வேறு சாட்சி கிடையாது. போலீஸ்காரர்கள் சர்க்கார் பக்கம் தவிர வேறு விதமாகச் சாட்சி கூறுவார்கள் என்றும் யாரும் எதிர்பார்க்க முடியாது. "குற்றவாளி"கள் நால்வரில், இருவர், கதர் சட்டை அணிந்த காங்கிரஸ்காரர்கள் என்றும் கூறப்படுகிறது. ஆச்சாரியார் வருகையை திராவிடக் கழகத்தார் மட்டும்தான் வெறுத்தார்கள் என்றும் சொல்வதற்கில்லை. பல காரணங்களால், காங்கிரஸ் வட்டாரத்திலேயே பலருக்கும் அவர் மீது பல காலமாக வெறுப்பு இருந்து வருகிறது. அவர்களிற் சிலர் கல் எறிந்திருக்கக் கூடும், திராவிடக் கழகத்தாரைப் பொறுத்த வரை கல் எறிதல் போன்ற பலாத்காரச் செயல்களில் அவர்கள் துளியளவும் ஈடுபடக்கூடாது என்று தலைவர் பெரியார் பலமுறை எச்சரித்திருக்கிறார். அந்த எச்சரிக்கையை மீறி திராவிடக் கழகத்தவர் எவரும் நடந்திருக்கமாட்டார்கள். இவ்வளவையும் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது, கல் எறிந்தவர்

(12-ம் பக்கம் பார்க்க)

இது எனது என்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அவள் புரட்டி விட்டு, 'இதை நாளைத் தருகிறேனே!' என்றாள்.

தலையை ஆட்டினேன்.

இருள் வந்து எங்களைப் பிரித்து விட்டது. அன்று இரவெல்லாம உறக்கம் ஏது-? மறுநாள் அவளுக்குக் கொடுப்பதற்காக ஒரு புத்தகத்தைப் பொறுக்கி எடுத்தேன். மாலை ஐந்து மணிக்கே கடற்கரை சென்றேன். அங்கே எனக்கு முன்பே அவள் காத்துக் கொண்டிருந்தாள். அருகிற் சென்றதும் புத்தகத்தைத் தந்தாள் நன்றி பறிதலுடன். நானும் சிரித்துக் கொண்டே வாங்கினேன். குறும்புத்தனமாக அவள் கையைத் தொட்டு வாங்கினேன், அவள் எண்ணத்தை அறியவேண்டு மல்லவா —? அதற்காகத்தான்! ஆனால், அவள் அதைப் பொருட்படுத்தவேயில்லை. எனக்கென்ன அதைப்பற்றி! அவளு கையில் என் கைபட்டதே எனக்குப் பேரின்பமாயிருந்தது.

'இதோ! இதையும் படியுங்கள்!' என்றேன்.

'அது என்ன...?'

'அழகின் சிரிப்பா—?'

'ஆம்! உன் ஒவ்வொரு அங்கங்களிலும் ஓடி விளையாடும் அழகின் சிரிப்பிலே நான் மயங்கி விட்டேன். அதை நீ உணரவே இதைப் பொறுக்கி எடுத்துத் தந்துள்ளேன்' என்று கூறினேன். அவளிடமல்ல; மனத்திற்குள்ளே.

மறுநாள் உன் சிரிப்பிலே மயங்கிய எனக்கு 'முத்தந் தரமாட்டாயா—?' என்ற கருத்தை உட்கொண்டு 'எதிர்பாராத முத்தம்' என்ற புத்தகம் தந்தேன்.

அதன் பின்னர் முத்தம் பெறாது கலக்க மடைந்த எனக்கு அமைதி தரமாட்டாயா—? அமைதி பெற நான் உயிர் வாழ ஒரு நல்ல தீர்ப்பைக் கூறமாட்டாயா—? என்ற கேள்விகளைக் கேட்க வேண்டும் அவளிடம் என்று துணிந்த பின்பும், மனம் வரவில்லை. சரி! நமக்குத்தான் புத்தகம் இருக்கிறதே, அதன் மூலம் கேட்டுவிடலாம் என்ற நோக்கந்தான் 'அமைதி', 'நல்ல தீர்ப்பு' என்ற இரு நூலையும் அவளிடம் கொடுக்கத் தூண்டிற்று.

இப்படி எத்தனையோ புத்தகங்கள் கொடுத்தேன். ஆனாலும் முதல் நாள் பார்த்த பார்வையிலிருந்து கொஞ்சமாவது மாற்றமடையவில்லை அவள். அதே அமைதிதான் நிறைந்திருந்தது. கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தேன். ஒரே ஒரு புத்தகம். அவள் என் குடும்பத்தில் ஒரு மணிவிளக்காக ஒளி வீசவேண்டும். ஆனால் எப்படிச் சொல்வது—? பழைய வழக்கப்படியேதான் செய்தேன். இன்று சுறுசுறுப்பாகச் சென்றேன் கடற்கரைக்கு. அவளும் 'ஆஜர்' தான்!

'இதைப் பார்த்தீர்களா—?' என்று நான் எடுத்துச் சென்ற புத்தகத்தைக் கொடுத்தேன்.

'எங்கே பார்க்கலாம்! என்ன புத்தகம்—?' என்று கையை நீட்டினாள்.

'குடும்பவிளக்கு' என்றேன்.

நெருப்பைத் தொட்டது போல் 'வெடுக்' என்று எடுத்துக் கொண்டாள் கையை. முகத்தைப் பார்த்தேன். மலர் முகம் வாடியது. குடும்ப....... விளக்கு........ என்று முணுமுணுத்தது அவள் வாய். நீர் கண்ணில் நிறைந்து நிற்க முடியாமல் பளிங்குக் கன்னத்தில் தாவிக் குதித்துக் கொண்டிருந்தது. கண்ணீரைக் கண்ட என் மனம் கரைந்து விட்டது. கஞ்சியின்றி ஏழை சிந்தும் இரத்தத்திற்கு இரங்காத உள்ளம் கன்னியரின் கண்ணீருக்கு உருகுவதைத் தானே நாட்டிலே காண்கிறோம். அப்படியிருக்க நான் உருகினதில் வியப்பொன்றுமில்லை.

'ஏன்? இப்படித் திடீரென மாற்றம்—? ஏதாவது... இடையூறு........' என்று பரிவுடன் கேட்டேன். அழுகை மிகுதியாயிற்று.

'என் கேள்வி உங்களுக்கு அதிக வருத்தத்தைத் தருவதானால் நான் மிகவும் வருந்துகிறேன்' என்றேன்.

'அப்படியொன்றுமில்லை. என் சகோதரர் போன்ற உங்களிடம் எனக்கென்ன வருத்தம். இந்தப் புத்தகம் என்னை இந்நிலைக்காக்கிற்று.'

'புத்தகமா—? புத்தகத்திற்கும் உங்கள் நிலைக்கும் என்ன சம்பந்தம்—?'

'ஆம்! புத்தகந்தான்! கேளுங்கள், என் கதையை! வக்கீல் வரதாச்சாரி மகள் நான். கமலம் என் பெயர். பணம் நிறைய இருந்ததால் மணத்தைப்பற்றி எண்ணாமல் படிப்பிலேயே சென்று கொண்டிருந்தது, என் இளமைப் பருவம். பணம் இருந்தால் பெண்ணுக்கு எத்தனை வயதானால் என்ன? மணம் தானாக நடக்கும். அந்த எண்ணத்தில் என் தந்தை இருந்தார். நானும் படித்து வந்தேன். தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் முதலிய பல

உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்

மாழிகளிலும் பயிற்சி பெற்
றன். எனக்குத் தமிழ் சொல்
க் கொடுக்க ஒரு ஆசிரியர் நிய
க்கப்பட்டார். நாளடைவில்
சிரியர் என் அன்பிற்குரியவ
னார். திருமணம் நடந்தது.
ணப் பரிசுகள் வந்து குவிந்
ன. அப்பரிசுகளில் ஒன்று
ன் இந்தக் '**குடும்ப விளக்கு**'!
து யாரோ அவருடைய
ண்பர் சிதம்பரத்திலிருந்து
னுப்பினார். அவர் பெயர்கூட
ஜன் என்று எழுதியிருந்தது.
ந்தப் புத்தகந்தான் எந்நேர
ம் அவர் கையிலிருக்கும்.
மலா!' என்பார். 'குடும்ப
ளக்கா' என்பேன். 'ஆம்'
ன்பார். இருவரும் படிப்
பாம். அவர் படிக்க நான்
ட்பேன். நானும் படிப்பேன்,
ல சமயங்களில். அவர் கேட்
க் கேட்டுக் களிப்பெய்துவார்.
து உண்மையில் எங்கள்
டும்ப விளக்காகவே விளங்கி
து. ஆனால் நீடிக்கவில்லை.
ணைந்து விட்டது. இப்
பாழுது வெறும் விளக்கு
ன்! எண்ணெய் இல்லை'
ன்று கூறிமுடிக்க டிய
ல்லை. அவளால் தொண்டை
ய்ந்து விட்டது.

'கமலா! ஆம்! கமலாதான்
வள் பெயரும். நான் தான்
டும்ப விளக்கு' அனுப்பி
னன், அவனுக்குப் பரிசாக!'
ன்றது என் உதட்டின்
சைவு.

'கமலா! உன் கணவன்
யர் கோபாலன் தானே!'

'ஆம்' என்றாள்.

அங்கிருக்க முடியவில்லை
ன்னால். குமுறியது என்
னம். குழம்பி விட்டது என்
ளை. எழுந்து சென்று விட்டேன். கடற்கரையையும் மறந்து விட்டேன். ஆனால், 'கமலா' கமலா!' என்று அடிக்கடி சொல்வதைக் கேட்ட என் நண்பர்கள் என்னைப் பைத்தியம் என்பார்கள். அவர்களுக்கென்ன தெரியும்? இன்று அவள்மேற் காதலில்லை. சகோதரி என்ற எண்ணமா? அப்படியுமில்லை. ஏதோ ஒருவித அன்பு! அவ்வளவுதான்!

அவள் என் குடும்ப விளக்காக விளங்க வேண்டுமென்று எண்ணினேன். ஆனால், அவள் அணைந்த விளக்கு. ஆனாலும் பரவாயில்லை, மீண்டும் ஒளி பெறச் செய்யலாம் என்று எண்ணினேன். அந்த ஆசையை அணைத்து விட்டாள். அவள் என் நண்பன் மனைவி என்பதைத் தெரிந்தும் எப்படி விரும்பும் என் மனம்?

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

சாற்றிடின் இவர்கள் நன்மை
சார்வரோ வேம மேலோய்"
"பறையரைக் கண்டு கண்டு
பலதிந்தை சொல்வதென்னே!
முறையறும் இந்தவார்த்தை
மொழிகின்ற மாந்தர் தாமும்
பறையரும் ஒன்றேயாவர்,
பண்பொடும் இவர் உளத்தில்
உறைதலோடு ஒளிந்து நின்று
உரைப்பவன் யாவன் வேமா"

யாவரும் ஒன்று என்ற கொள்கையைக் கூறுவதோடு நிறுத்தவில்லை, அதே பார்ப்பனர்கள் பேசிடும் புராணக்கதையையே காட்சியாக்கி, நையாண்டியும் செய்கிறார். அப்பாடலைப்பாரீர்.

"சக்கிலி குலத்தை மிக்க
தாழ்த்தியாய்க் கூறல்என்னே
சக்கிலி பெற்றமாது தவத்து
அருந்ததியால் என்றும்
சக்கிலி பிராமணர்க்குத்
தகுதியார் மாமனன்றோ
சக்கிலி என்ன வேறாய்ச்சாற்றல்
ஏன்வேமமேலோய்"

இவ்வண்ணம் வேமன்னாவின் வெடிகுண்டுவீச்சு வைதிகக் கோட்டை கொத்தளங்கள்மீது வீழ்ந்தன. வேதம் ஓதும் பிராமணரின் பாதம் வீழ்ந்து வணங்கும் பாமர மக்களுக்கு, வெறியுறும் நரியின் கூச்சல், கூடக்கத்தும் காக்கை, கள்ளர், கர்த்தபம் என்று வேமன்னா அந்த உயர்குல உரிமை பேசியவர்களைத் தாக்கியபோது ஆச்சரியமாகத்தான் இருந்திருக்கும். ஆனால் வேமன்னா தன்வார்த்தையை ஆராய்ந்து பாராது அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கூறவில்லை. யார் எதைச் சொன்னாலும் கேட்கும் தலையாட்டியாக வேண்டாம், ஆர அமர யோசித்துப்பார், அறிவைத் துணைக்கு அழை என்றும் கூறினார்.

கேளுங்கள் இந்தக் கவிதையை.

"கேட்டிடுபலர் எதைச்
செப்பினும்
கேட்ட உடனே துரிதம்
கொளேல் கேள் விபரங்கள்
கேட்டுஅதன் விபரம்அறிந்தவன்
கேட்குதல்என்? அவனே
மனிதன் கேட்டியோ வேமா"

மனிதன், சிந்தித்து முடிவுக்கு வர வேண்டும், சந்தேகம்இருந்தால் தெளிவு கேட்கவேண்டும், இவர் கூறுவதைக் கேட்கக்கூடாது அவர் சொல்வதைக் கேட்கக் கூடாது என்று எண்ணலாகாது, எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்பதுணர வேண்டும். கோல்முன்கூத்தாடும் குரங்கு! அங்குசத்துக்கு அடங்கும் யானை! கடிவாளத்துக்குக் கட்டுப்படும் குதிரை! கயிற்றுக்கு அடங்கும் எருது! எலும்புத் துண்டுக்கு அடிமைப்படும் நாய்! மிருகங்களின் சுபாவம், ஆசை, பயம், இரண்டிலே எதிலேனும் ஒன்றுக்குக் கட்டுப்பட்டுக்கிடப்பது, பகுத்தறிவு கிடையாமையால். மனிதா! நீயும் அப்படி இராதே! சிந்தித்துப்பார்! ஆராய்ந்து முடிவுசெய்! என்று அறிவுறுத்தினார் வீரவேமன்னா. வாழ்க அவர் புகழ்!

'ஒரு பொருள் தனி' எனும் மனிதரைச் சிரிப்போம்!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

"புத்தகம் சடையும் தண்டம்
புலியின்தோல் கமண்டலத்தை
இத்தரையோர்கள் காண
ஏற்றமாய்ச்சுமப்பர் என்றும்
சுத்தம் உள்ளத்தில் இன்றிச்
சுமந்து இவைதிரியின்மேலே
முத்தியிற்கூடல்உண்டோ
முன்னிடின் இவர்கள் வேமா"

விடுகிறரா இத்தோடு! இல்லை, அந்தச் சுமைதாங்கிகளைப் பிடித்திழுத்துவந்து, நம் முன் நிறுத்தி வைத்து, அவர்களின் மொட்டைத் தலையிலே குட்டுகிறர், பாருங்கள் வேடிக்கையை!

"காட்டினில் இலைகள் தின்றும்
காஷாயம் மெய்யில்பூண்டும்
நாட்டமாய்த் தலையில் மொட்டை
நலமெனச் செய்தும் என்ன?
ஏட்டையாய் மொட்டை செய்யின்
எண்ணங்கள் மொட்டையாமோ?
வேட்டலை அகற்றின் மேன்மை
மேவிடும் மேலோய் வேமா!"

"சுமைதாங்கியே! இதென்ன கோலம்? ஏன் காஷாயம் தரித்தாய்? ஏன் மொட்டை அடித்துக்கொண்டாய்? என்ற கேள்விக்கு, மொட்டைச்சாமி என்ன பதிலளிப்பான், "மோட்சம் போக இக் கோலம் கொண்டேன்" என்று கூறுவான். வேமன்ன அட மொட்டைத்தலையா! தலையை மொட்டை அடித்துக்கொண்டாயே தவிர, ஆசையை விட்டாயா? அலைகிறயே, அலையும் மனதை அடக்கக் கற்றுக்கொண்டாயா? இச்சையற்றல் மேன்மை வந்து சேருமே, இப்படி மழுங்க மொட்டை அடித்துப் பயன் என்ன?' என்று கேட்கிறர். பரிதாபம்! அந்த வேடக்காரன் என்ன பதில் கூறமுடியும்! சாயம் வெளுத்ததே சங்கரா என்று அழ வேண்டும்!

"உடலினில் நீறுபூசிச் சடைகளைப்
புனையினும் தன்
உடையனும் பரனைக் காணும்
உரிமையை எய்தான், எய்தான்
படலினைக்கொண்டு சாத்தின் பலம்
உறும்கதவு அதுவாமோ
திடமுறின் சிந்தை தன்னில்
சீருறப்பெறலாம் வேமா"!

மனதை அழுக்கேறச் செய்யாதே! திடமனது பெறு. அது தான் சீருறவழி, இந்த வேடமல்ல, என்று, உபதேசிக்கிறர், அந்த உண்மை யுணராது காவிபூண்டவர்க்கு.

அத்தகைய காவிக்கள்ளர்களுடன் சேராதீர் என்று மக்களுக்கு வேமன்ன மதிபுகட்டுகிறர்.

"குருஎனக்கூறிக் கொள்ளும்.
திருடராம் கர்த்தபங்கள்
திரமிலாச் செல்வம் தன்னைத்
திரமென மனதில் எண்ணி
உரமிலா மனிதர் தம்பால் உறு
பொருள் பறிப்பர் இந்த
தரமிலா மோசம் செய்யும் சழக்
கரைச் சாரேல் வேமா"

காணிக்கை கேட்கும் குருமார்களும், பாதபூஜை செய்து 'பிட்சை' இடும் சீடர்களும், கேட்கவேண்டும் இப்பாடலை.

மக்களிடம் பணம் கேட்பர், அந்தக் குருமார்கள்! எப்படிப்பட்ட மக்களிடம்? உரமிலா மனிதரிடம், மனவலிவில்லாத மாந்தரிடம். பணம் எப்படிப்பட்டது? திரமிலாதது! பாழான பணத்தைப் பாமரரிடமிருந்து பறிப்பர், குருமார்கள் என்று கூறிக்கொள்பவர்கள். அவர்களை வேமன்ன கடிந்துரைப்பதைக் கேளுங்கள்! கள்ளர்களாம்! கழுதைகளாம்!! ஆண்டி வேடம் பூண்டு அகப்பட்டவரிடம் பொருள் பறிக்கும், அவர்கள், வேமன்னவிடம் வெகு பாடு படுகிறர்கள்! இத்தகைய கள்ளர்களிடம் சேராதே! என்று வேமன்ன மக்களுக்குப் புத்தி புகட்டுகிறர்.

தீர்த்தயாத்திரை போவது, மூர்த்தி ஸ்தலங்களைத் தரிசிப்பது, என்ற வழக்கத்தை வேமன்ன, சாடுகிறர் பலமாக. இவைகளால் ஒரு பலனுமில்லை என்று விளக்குகிறர், மோட்சம் போக அது மார்க்கமல்ல என்று இடித்துரை[க்]கிறர். பாருங்கள் பாட்டை.

"காசியின் தீர்த்தம் கொண்ட
காவடிதூக்கிக் கால்கள்
பேசிடமுடியா வீக்கம் பெற்று,
தன்முகமும் வீங்கி
தாசர் என்றிடத்திரிந்து தன்
பசிக்கு உண்ணல்விட்டு
மோசமுற்று இறந்தபின்பு
மோட்சந்தான் வருமோ வேமா"

காசி செல்கிறீர்! காவடி சுமக்[கி]றீர்! பட்டினி கிடக்கிறீர்! பல[ன்] என்ன? கால்வீக்கமும் முகவீ[க்]கமும்!! செத்தபின் மோட்ச[ம்] என்று நம்புகிறீரே, பேதை ம[க்]களே! என்று கடிந்துரைக்கிற[ர்]. பலப் பல ஊர் ஓடுவானேன், உ[ள்]ளத்திலே அல்லவா உறைகிற[ன்] ஈசன் என்று கூறுகிறர். ஏ[ன்] எங்கெங்கோ சென்று அலைகிறீர் என்று கேட்கிறர். கேட்கு[ம்] விதத்தைக் காணீர்.

"காசியும் மதுரைதானும்
காஞ்சியும் கயை பிரயாகை
பேசிடும் அயோத்தி தானும்
பிறங்கிடும் சேதுதானும்
நேசமாய் உடலின் உள்ளே
நிலவிய தன்மை பாரார்
ஆசையாய் நதிகள்தேடிஅலைவது
ஏன் மாந்தர் வேமா"

உருவ வழிபாட்டை வேமன்[ன] உரமாகக் கண்டிக்கிறர், கல்லா[ல்]லான உருவத்தைக் கடவுளென்[று] தொழுகிறயே, என்ன மதி இது என்று கேட்கிறர். நையாண்[டி] செய்கிறர்.

"சிலைதனைக்கொண்டு மாந்தர்
சீருறக்கோயிற்கட்டி
சிலைதனை வேறென்று உள்ளே
சிவன் எனத்தெரியவைத்து
சிலைதனைச் சேவை செய்யின்
சிறந்திடும் பலன்என்காண்ப[ர்]
சிலைதனை விட்டு தன்னுட்சிவனைத்
தேடாதோர் வேமா"
கற்களைக் கொண்டுவந்து
காலினுன் மிதித்துவந்து

இயல் பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்

சிற்பிசெய்திட்ட பிம்பம்
சிறந்ததாய் கோயிலுள்ளே
பொற்புறநாட்டி என்றும்
போற்றிடு மனிதருற்ற
துற்குணம் என்னவென்று
சொல்லுவேன் வேமமேலோய்,
சிலைதனைப்பதுமைசெய்து செகத்
துளோர் புகழவைத்து
அங்கு அலகிலாப்பூசை செய்வர்
அறிவிலாமாந்தர் இந்த
உலகுறும் பிராணிதன்னில்
உண்மையாய்ச் சிவனும் நிற்க
அலைதல்ஏன் பிராணிதம்மில்
அன்புறுது இவர்கள்வேமா"

என்றெல்லாம் கேட்கிறார். அவ
ியமற்ற, அர்த்தமற்ற, அறிவற்ற
ாரியத்திலே ஈடுபடும் மக்கள் அற
நெறி அறியாதிருப்பது கண்டு
வெகுண்ட வேமன்னா "வீட்டுக்
ுள் நுழைந்து பானைகளை உருட்
ப் பண்டம் தேடிடும் நாய்களை
ும்" கோயிலுக்குக் கோயில்
சன்று கும்பிட்டுக் கூத்தாடி
மாட்சம் கிடைக்குமென்று கரு
ும் பக்தர்களையும் ஓர் இனம்
ுக்குகிறார்.

காவனற்கோயிற சென்றுங்
காவலை புரிதலன்றித்
ரமறும் புத்திகொண்டு
தேவனைப்பாரான் என்றும்
ரமறுநாய்கள் இல்லமுற்றும்
பாண்டங்கள் தன்னை
ரைவோடும் தேடல்ஒக்கும்
மேதினிதன்னில் வேமா"

இங்ஙனம் விவேகமற்று வீணாட்
த்திலே மக்கள் ஈடுபட்டுப் பாழ்
டுவதன் காரணம் என்ன என்று
வமன்னா சிந்திக்காமலில்லை. தீர்த்த
ாடினால் திரு அருள் கிடைக்கும்,
ாத்திரை செய்தால் மோட்சம்
டைக்கும், கோயிலிலே சென்று
ருவ வழிபாடு செய்தால் கோரிய
லன் கிடைக்கும், எல்றெல்லாம்,
மர மக்களைப் பார்ப்பனர் தூண்
விட்டதாலேயே, மாந்தர் இந்த
பக்கத்தில்வீழ்ந்தனர் என்பதைக்
ண்டறிந்து, அத்தகைய நயவஞ்ச
மீது வீசுகிறார் ஓர் வெடிகுண்டு!

வெறியுறுநரிகள் போன்று
விப்பிரர் எல்லாம்கூடி
றியுறு வேதமென்று
நீளமாய்ச் செப்பிமண்ணில்
சிறியதாம் கற்கள் தன்னில்
சிவனைசேர்ப்போம் என்று
அறிவிலாப் பிரமைதன்னால்
அறைகுவார் மேலோய்வேமா!',

பாமரமக்களை ஏய்க்கும் பார்ப்பனர்களை வெறிபிடித்த நரி என்று வெகுண்டுரைத்த வேமன்னாவின் கோபம் அடங்கவில்லை, பார்ப்பனர் செய்யும் பல்வேறு அட்டூழியங்களை எண்ணுகிறார், மேலும் மேலும் கோபம்மூள்கிறது, மற்றும் பல வெடிகுண்டுகளை வீசுகிறார்.

"பதியினில்விப்பிரர் கூடிப்
பலமந்திரங் கூறிவாழ்த்தி
சதிபதி என்னஉள்ளம்
சம்மதத்தாலே சால
விதியினை அறிந்து சேர்க்க
விதவையாய்ப் போவதென்னோ,
மதியினிலாயின் இது மாமோச
மாகும் வேமா!"

விதியின் போக்கை உணர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டு திருமணத்துக்குப் பொருத்தம் வைக்கிறார்களே பார்ப்பனர், அவர்கள் ஜாதகம் பார்த்து ஏற்பாடு செய்கிற கலியாணம் செய்து கொண்டவர்களிலே எவ்வளவோ பேர் விதவைகளாகிவிடுகிறார்களே, ஏன் என்று எண்ணிப்பார், ஆராய்ந்துபார்த்தால், இது மகா மோசம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்; என்பது மேலே உள்ள பாடலின் கருத்து.

பார்ப்பனர்கள் மந்திரங்களைக் கூறுகின்றனரே! என்று மயங்கும் மக்களுக்கு அறிவுறுத்துகிறார், "காக்கைக் கூட்டம் போலக் கத்துவர் அதனைப் பிரமாதமென்று கருதாதே" என்று கூறுகிறார்,

"வடுகு பார்ப்பனர்களெல்லாம்
வடுகி மந்திரங்கள் தன்னால்
வடுகினைச் செய்வதாக
வதறிக்கொள்வார்கள்மேன்மேல்
படிதனிற் கழுநீர் உண்ணும்
பண்பிலாக் காக்கைதானும்
திடமுடன் கர்கரென்று
கத்தல்போற் சேர்ந்துவேமா"

என்று பாடிப் பார்ப்பனரின் மந்திரம் வெறும் கூச்சல் என்று மக்களுக்கு மதி புகட்டுகிறார், இப்படிப்பட்ட யோக்யதையுடைய பார்ப்பனருக்குப் போஜனம் தந்தால் புண்யம் வரும் என்று நம்பும் மக்களுக்குக் கூறுகிறார் நாய்களுக்குச் சோறிட்டாலுங்கூடத்தானய்யா நன்மை உண்டு, ஜீவாத்மா ஒவ்வொன்றிலேயும் தான் பரமாத்மா இருக்கிறான், பார்ப்பனரிடம் மட்டுமேதான் என்று எண்ணுகிறீர் என்ற கருத்துடன்,

"மண்ணினின் மறையோர் உள்
[ளம்
மகிழ்ந்திட அன்னம் ஈந்தால்
எண்ணிலாப் புண்யம்உண்டு
[என்று
இயம்புவர் நாய்கள் உண்ண
நண்ணியே இட்டால் இங்கு
நணுகிடும் குறைகள் என்னோ
திண்ணமாம் அங்கும் இங்கும்
சிவன் நிறைந்திருக்க வேமா"

என்ற பாடலைக் கூறுகிறார்.

இந்த இலட்சணத்திலே, பார்ப்பனர்கள் தம்மை மேல்ஜாதி என்றும் கூறிக்கொள்கிறார்களன்றோ! அதுகண்டு வேமன்னாவுக்கு ஆத்திரம் பிறக்கிறது, இதனால் பிறக்கிறது ஓர் ஆவேசக்கவிதை.

"விப்பிரர் என்றுகூறி
வேதத்தைக்கற்று மண்ணில்
தப்புறுமனிதர் தம்மைத்
தாழ்த்தியே பரிகசிப்பார்
துப்பிலாத் துவிசராமோர்
தோன்றிய குலனின்மேலாய்ச்
செப்பிடலாமே தாசர்
ஜெனித்திடும் குலத்தை வேமா!"

தவறுசெய்யாது, பாடுபடும் குலத்தைப் பழிக்கும் பார்ப்பன குலத்தைவிட அவர்களால் தாசர் என்று தூற்றப்படும் குலமே மேலானது என்று கூறுகிறார். அம்மட்டோ! தீண்டாதார் என்று ஓர் கூட்டத்தினரைக் கூறிக் கொடுமை செய்வதைக்கண்டு, மனம்நொந்து, வேறு சில பாடல்களைப் பாடுகிறார், பார்ப்பனீயத்தைச் சாடுகிறார்.

"ஏற்றம்தாழ்வு என்றுஉளத்தில்
எண்ணி எந்நாளும் தக்க
மாற்றத்தை அறிகிலாத மந்தமார்
மனிதர் பல்லோர்
தூற்றுவார் பறையா கிட்டேல்
தூரப்போ என்று பாரில்

(9-ம் பக்கம் பார்க்க)

ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம்!

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் திராவிடக் கழகத்தார்தான் என்பதற்கு ஆதாரமில்லை என்பது நன்கு விளங்குகிறது.

எது எப்படி இருந்தாலும், குற்றம் சாட்டப்பட்ட நால்வர் குற்றவாளிகளாய் இருந்தால், அது சட்டப்படி நிரூபிக்கப்பட்டால், அவர்களுக்கு சட்டப்படி உள்ள தண்டனையை, சட்டப்படி நியமிக்கப்பட்டுள்ள நீதிபதி, சட்டப்படி தரவேண்டியதுதான் என்பதை நாம் மறுக்கவில்லை. குற்றவாளிகளுக்கு ஆளுக்கு ஒரு மாதம் கடுங்காவல் தண்டனை தந்துள்ளார் நீதிபதி. அது தவறென்று யாரும் சொல்லமுடியாது. கல் எறிந்து பொதுமக்களிடையே அமைதியைக் குலைப்பவர் யாராய் இருந்தாலும், அவர்கள், தண்டிக்கப்படவேண்டியதுதான் நியாயம்.

ஆனால், நீதிபதி, தன் தீர்ப்புரையில், குற்றவாளிகளின் கட்சிக் கொடி எவ்வளவு கறுப்பாயிருக்கிறதோ அவ்வளவு கறுப்பானதே (அவமானகரமானதே) அவர்கள் செயல் என்றும், முதல் இந்திய கவர்னர் ஜெனரல் தான் பிறந்த ஊருக்கு முதல்முறை வரும்போது அவரை வரவேற்காமல் இருப்பதே மிக மிக அவமானகரமானது என்றும் கூறியிருப்பது அவருடைய அதிகார எல்லைக்குப் புறம்பானதும் அவர் பெயருக்கு இழுக்குத் தருவதுமான செயல் என்பது நம் கருத்து.

குற்றவாளிகள் கல் எறிந்தார்களா இல்லையா, எறிந்தார்கள் என்பதற்கு போதுமான சாட்சியம் உண்டா இல்லையா, எறிந்திருந்தால் எவ்வளவு தண்டனை தரலாம் என்பதை நிர்ணயிக்கும் பொறுப்பும் உரிமையும்தான் நீதிபதிக்கு உண்டே தவிர குற்றவாளிகள் சேர்ந்திருக்கும் கட்சியின் கொடியைப் பற்றியோ, அந்தக் கட்சி கவர்னர் ஜெனரலை வரவேற்கவோ வெறுக்கவோ செய்துள்ள முடிவைப் பற்றியோ நீதிபதி என்ற தோரணையில் 'வார்த்தையாட' அவருக்குச் சிறிதும் உரிமை கிடையாது. சட்டம் நீதிபதிக்கு ஆணையிட்டது கல்எறி வழக்கில் தீர்ப்புக் கூறு என்பதுதானே தவிர திராவிடர் கழக நடைமுறைகளின் மீதோ கொடியின் தத்துவத்தின்மீதோ தீர்ப்புக் கூறு என்பது அல்ல! நிச்சயமாக அல்ல!

கருஞ்சிவப்புக் கொடி திராவிட சமுதாயத்தின் இருதடகீதம்! அது அவர்களின் கண்ணின் கருமணி! தம் உயிரை வேண்டுமானாலும் பறிகொடுப்பரே தவிர, திராவிடர்கள், தங்கள் அருமைக் கொடிக்கு துளியளவும் இழுக்கு நேருவதைப் பொறுக்க மாட்டார்கள்; இதனை அறியாத நீதிபதி, தன் அதிகார எல்லையைக் கடந்து, கூறத் தகாதன கூறி, மக்கள் உள்ளத்தைப் புண்படுத்தி இருக்கிறார். தீயினாற் சுட்டபுண் ஆறும் ஆனால் நாவினால் சுட்ட வடு என்றும் ஆறாது என்பதை நீதிபதி நினைவில் நிறுத்தட்டும்; மக்கள் மன்றத்தில், தான் செய்த தகாத செயலுக்கு மன்னிப்பு கேட்கட்டும்.

தன் அதிகாரத்தின் எல்லை எதுவரை உண்டு என்பதைக்கூட அறியாதவர்கள் இந்த நாட்டில் நீதிபதிகளாயிருக்கிறார்கள் என்றால், இதை, நாட்டின் துரதிர்ஷ்டம் என்றுதான் கூறவேண்டும்—ஆனால் அதிர்ஷ்டம் என்பதிலோ நமக்கு நம்பிக்கை இல்லை—ஆகவே இதை என்னவென்று கூறுவது என்றே நமக்குப் புரியவில்லை.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உயிரோவியங்களை எம் கட்சிப் பத்திரிகைகளில் பார்த்து மகிழ்ந்திருக்கின்றேன்!"

"குமாருக்கும் அய்யருக்கும் ஏதாகிலும் விரோதம் உண்டா?"

"எனக்குத் தெரியாது!"

இருவருக்கு மிடையே நடைபெற்ற பேச்சைப் பூர்ண லிங்கம் எழுதிக் கொண்டே வந்தார். கடைசியில் இதனைப் படித்து விட்டுக் கையெழுத்து போடுங்கள் என்று சிவனைக் கேட்டுக் கொண்டார். படித்துப் பார்த்து விட்டு கையொப்ப மிட்டான் சிவன். பிறகு போலீஸ் இன்ஸ்பெக்டர் சென்று விட்டார்.

ஒரு மாதம் சென்றது. சிவனின் உடல் மிகவும் மோசமான நிலையை அடைந்துவிட்டது.

சிவனின் உடல் கட்டிலில் சாய்ந்துகொண்டிருந்தது. வாழ்வும் சரிந்து சாய்ந்து விட்டதே என்று அவனது உள்ளம் எண்ணி வேதனை அடைந்தது. இளம் வயதில் கட்சிக் கொள்கைகளைப் பரப்பதான் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும், அவற்றால் கிடைத்த சிறு சிறு வெற்றிகளைக் கண்டு மனம் மகிழ்ந்ததையும் நினைந்து நினைந்து கண்ணீர் விட்டான். அதுபோன்ற இன்ப நாட்களை இனித்தான் காணப்போவதில்லையே என்று நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

அறையினுள் குமுதம் வருவதைக் கண்ட சிவன் தன் கண்களைத் துடைத்துக் கொண்டான். அருகிலிருந்த "பாரதிதாசன் கவிதைகள்" என்ற பலவித உணர்ச்சிகளின் தொகுப்பு நூலை மெதுவாக எடுத்தான். கவிதைப் புதையலின் ஏடுகளை மெள்ளத் தன் விரல்களால் தள்ளினான். அவனது உயிருக்குயிரான கவிதையின் ஏடு வந்ததும் சோர்ந்த அவனது விழிகள் அங்கேயே மொய்க்கத் தொடங்கி விட்டன. குமுதம் அவனது செயல்களைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தாள். தலை நிமிர்ந்து தன் மனைவியைப் பார்த்தான். கண்கள் கலங்கின! குமுதத்தின் கண்களில் நீர் கசியவில்லை! அழுது அழுது கண்ணீர் ஊற்று வற்றிவிட்டதா? அல்லது துக்கத்தையும் தாண்டிய நிலையை அவள் உள்ளம் பெற்றுவிட்டதா? யாரும் அறியார்!

"குமுதம்! உடனே வீணையைக் கொண்டுவா!" என்றான் சிவன். குமுதம் சென்று வீணையைக் கொண்டுவந்தாள். (தொடரும்)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)